# மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
# கண்டி
# அலகுப் பரீட்சை - 01

பாடம் : இஸ்லாம் நேரம் : 1 1/2மணி

பகுதி-1

- **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. இஸ்லாம் எனும் சொல் பிறந்துள்ள வேர்ச்சொல்
   1. ஸலாம் 2. ஸாலிம் 3. ஸில்ம் 4.ஸலம் 5. ஸலாஹ்

2. அல்லாஹ் பூமியில் மனிதனை அவனுடைய
   1. அடியானாக 2. பணியாளாக 3. குடும்பமாக 4. பிரதிநிதியாக 5. தூதராக அமர்த்தியுள்ளான.

3. ‘‘நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள்.ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு பற்றி விசாரிக்கப்படுவீர்கள்.’’எனும் ஹதீஸ் புலப்படுத்துவது.
   1. மனிதர்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள்.
   2. மனிதன் பொறுப்புக்களை சுமந்தவன்.
   3. மனிதன் பொறுப்புக்களை சுமந்தவன்.மறுமையில் அதற்கு வகைக்கூறக் கடமைப்பட்டவன்.
   4. மனிதன் தத்தமது பொறுப்ர்க்களை சரியாக நிறைவேற்ற வேண்டும்.
   5. எமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலமே மறுமையில் வெற்றி பெறலாம்.

4. ‘**மஆத்**’ பற்றிய நம்பிக்கை என்பது,
   1. மறுமை பற்றிய நம்பிக்கை 2. நபிமார்கள் பற்றிய நம்பிக்கை
   3. அல்லாஹ் பற்றிய நபிக்கை 4. மலக்குகள்இ ஜின்கள் பற்றிய நம்பிக்கை

5. பிரபஞ்சம் எனப்படுவது.
   1. வானங்களையும் அதில் உள்ளவற்றையும் குறிக்கும்.
   2. பூமியையும் அதில் உள்ளவற்றையும் குறிக்கும்.
   3. வானம் பூமி அனைத்தையும் குறிக்கும்
   4. அல்லாஹ் தவிர்ந்த அனத்துப் படைப்பினங்களையும் குறிக்கும்.
   5. அல்லாஹ் உட்பட அவனுடைய அனைத்து படைப்புகளையும் குறிக்கும்.

❖ **6 – 10 வரையான வினாக்களுக்கான வியினை ஆங்கில எழுத்துக்களினால் தரப்பட்டுள்ள வியங்களை கவனத்திற் கொண்டு விடையளிக்குக.**

6. இமாரத் பணியில் உள்ளடங்காத அம்சங்களாவன.
   A. பெற்றோரை மதித்தல்
   B. மற்றவர்களுக்கு உதவி செய்தல்
   C. நிழல் தரும் மரங்களை நட்டுதல்
   D. உரிய நேரத்தில் தொழுதல்
   E. சிரமதான பணியில் ஈடுபடுதல்
   1.ABD 2.BCD 3.ABE 4. ACD 5. BAC

7. இஸ்லாத்தின் சிறப்பம்சங்களாக கருதப்படுபவைகள்.
   A. தனிமனித மார்க்கமாகும்.
   B. சமூக மார்க்கமாகும்
   C. நெகிழாத் தன்மை கொண்டது
   D. சம காலத்தில் நெகிழும் தன்மை, நெகிழாத் தன்மையுடையது.
   E இம்மை, மறுமை வாழ்வுக்கான சகல விடயங்ளையும் கொண்ட மார்க்கமாகும்.

1.BCE 2. ABC 3. BDE 4. CDE 5. EAB

8. கிலாபத் பணியில் உள்ளடங்கும் விடயங்களாவன.
   A. தகுதியானவர் தலைமைத்துவப் பணியை ஏற்றல்
   B. சுற்று சூழலை அழகாக வைத்தல்.
   C. நாட்டின் சட்டத்திட்டங்களை மதித்து நடத்தல்.
   D. ஹஜ்இ உம்ரா கடமைகளை நிறைவேற்றல்
   E சமூக விரோதச் செயல்களைவிட்டும் விலகியிருத்தல்
   1. ABC 2. ACD 3. CDE 4. CAD 5. ACE

9. மனிதனின் தோற்றம் பற்றிய இஸ்லாத்தின் கொள்கை அல்லாதது.
   A. ஆதம் (அலை) அவர்களிலிருந்து மனிதன் உருவானான்
   B. மனிதன் களிமண்ணின் சக்தியிலிருந்து படைக்கப்பட்டான்
   C. மனிதன் பூர்வீகமானவன்.
   D. மனிதன் இரத்தக்கட்டியிலிருந்து படைக்கப்பட்டான்.
   E. மேற்கூறிய அனைத்தும் பிழையானது.
   1.ABCD 2.BCDE 3.ABDE 4. ACDE 5. BDCA

10. இபாதத் பணியில் உள்ளடங்கும் விடயங்களாவன.
   A. அல்லாஹ்வை வணங்கி வழிப்படல்.
   B. கலீபாவாக தொழிற்படல்.
   C. நிர்வாகப்பணிகளை ஒழுங்கமைத்தல்.
   D. ஸக்காத் கொடுத்தல்.
   E. பயன்தரும் மரங்களை நட்டுதல்.
   1. AC 2. BC 3. BE 4. AD 5. BD

❖ **11 – 13 வரையிலான வினாக்களில் ஒ இ ல நிரல்கள் தரப்பட்டுள்ளன.ஒ நிரலில் காணப்படுபவை ஏதோ ஒரு விதத்தில் ல நிரலில் உள்ளவற்றுடன் தொடர்புப்பட்டுள்ளன. ஒ நிரலில் உள்ளவற்றுடன் ல நிரலில் உள்ளவற்றை தொடர்புபடுத்தும் போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தை தெரிவு செய்க.**

**11.**

| **x** | **y** |
|---|---|
| **1.** அகீதா | A - றஸூல்மார்கள் |
| 2. ஷரீஆ | B - ஏகத்துவம் |
| 3. றிஸாலத் | C - மறுமை நம்பிக்கை |
| 4. தௌஹீத் | D - நம்பிக்கை கோட்பாடு |
| 5. மஆத் | E - சட்டத்துறை |

1. ABCDE 2. BCADE 3. ABEDC 4. EDCBA 5. DEABC

**12.**

| **x** | **y** |
|---|---|
| 1. காத்தமுன் நபி | A - பிரதிநிதி |
| 2. ரப்பானிய்யத் | B - இவ்வுலகம் |
| 3. இன்ஸானிய்யத் | C - இறுதி நபி |
| 4. கலீபா | D - தெய்வீகத் தன்மை |
| 5. அத்துன்யா | E - மானுடத்தன்மை |

1. CDEAB 2. ABDEC 3. BACDE 4. AECBD 5. EDCBA

**13.**

| x | | y |
|---|---|---|
| 1. | காலிகுன் | A - யாவும் அறிந்தவன் |
| 2. | பஸீருன் | B - உருவமமைப்பவன் |
| 3. | முஸவ்விருன் | C - சக்திமிக்கவன் |
| 4. | அலீமுன் | D - சிருஷ்டிக்கர்த்தா |
| 5. | காதிருன் | E - பார்ப்பவன் |

1. CDEAB 2. DEBAC 3. BACDE 4. AECBD 5. EDCBA

14. ஹுகூகுல்லாவில் அடங்கும் விடயங்களை கொண்ட விடை தொகுதி.
1. தொழுதல் இ மரம் நட்டுதல்இ பசித்தோருக்கு உணவளித்தல்.
2. ஸக்காத் கொடுத்தல் இ திக்ர் செய்தல் இ பாவமன்னிப்பு கோரல்.
3. கல்வி கற்றல் இ ஹஜ் செய்தல் இ நோன்பு நோற்றல்.
4. அநாதைகளை ஆதரித்தல் இபெற்றோருக்கு பணிசெய்தல் இஆசிரியரை மதித்தல்.
5. சூழலை சுத்தம் செய்தல் இ நோன்பு நோற்றல் இ உம்ரா செய்தல்.

15. ஹுகூகுல் இபாதில் அடங்காத அம்சங்களாவன.
1. பயிர்களுக்கு நீர் ஊற்றுதல் இ ஏழைக்கு உதவுதல் இ ஸகாத் கொடுத்தல்.
2. தொழுதல் இ தஸ்பீஹ் செய்தல் இ சாப்பிடுதல்.
3. குருடனை பாதை கடக்க உதவுதல் இசூழலை சுத்தம் செய்தல் இமரம் நட்டுதல்.
4. திக்ர் செய்தல் இ இஸ்தி.ஃபாரில் ஈடுபடல் இ தவ்பாச் செய்தல்.
5. இஸ்தி.ஃபாரில் ஈடுபடல் இ தவ்பாச் செய்தல் இ பிறருக்கு உபதேசம் செய்தல்.

**16 – 20 வரையிலான வினாக்களில் இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுக்களுக்கு பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதை தெரிவு செய்து அதன் இலக்கத்தை குறிக்க.**

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 16) இஸ்லாம் மார்க்கம் எல்லா சமூகத்திற்கும் பொதுவானது. | காலத்தால் மாற்றம் பெறக்கூடியது. |
| 17) இவ்வுலக வாழ்வு அழியக் கூடியது. | இவ்வுலக வாழ்வின் செயற்பாடுகள் பற்றி மறுமையில் விசாரிக்கப்படும். |
| 18) இஸ்லாம் என்பது ஓர் பூரண வர்ழ்க்கைத்திட்டமாகும். | இஸ்லாம் என்பது மனித வாழ்வில் சகல துறைக்கும் வழிகாட்டக் கூடிய் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய மார்க்கமாகும். |
| 19) பிரபஞ்சத்தின் படைப்பாளன் அல்லாஹ்.ஆனால் | பிரபஞ்சத்தின் பொருட்கள் |

மனிதன் அவற்றிலுள்ள வற்றுக்கு உரிமையாளன் | மனிதனுக்காக படைக்கப்பட்டுள்ளன.

20) பிரபஞ்சமும் உலகமும் அழியமாட்டாது | மனிதன் அழிந்து விடுவான்.இவ்வுலகமும் மறுமையும் அழியாது. $(2 \times 20 = 40)$

## பகுதி – 2

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி – அ

01)பின்வரும் சோடிப்பதங்களை சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

1. அல்-ஈமான் - அல்-இஸ்லாம்
2. அல்குர்ஆன் - அஸ்ஸுன்னா
3. இபாதத் - இமாரத்
4. அத்துன்யா – அல்-ஆகிரா

$(5 \times 4 = 20)$

## பகுதி – ஆ

**'இஸ்லாம் பூரண வாழ்க்கைத் திட்டம்'** இக்கூற்றை விளக்குக. (10புள்ளிகள்)

மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் அவன் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை விபரிக்க. (10புள்ளிகள்)

1)

1. இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை விளக்குக.
2. இஸ்லாதின் கண்ணோட்டத்தில் பிரபஞ்சம் பற்றி விளக்குக.

$(10 \times 2 = 20)$

| புள்ளித்திட்டம் |
|---|
| தரம்: **GCEA/L** |
| பாடம் - இஸ்லாம் |

## பகுதி - 1

| வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | 3 | **6** | 1 | **11** | 5 | **16** | 3 |
| **2** | 4 | **7** | 3 | **12** | 1 | **17** | 1 |
| **3** | 3 | **8** | 5 | **13** | 2 | **18** | 5 |
| **4** | 1 | **9** | 4 | **14** | 2 | **19** | 2 |
| **5** | 4 | **10** | 4 | **15** | 4 | **20** | 4 |

## பகுதி – 2

## 'அ'

1) 1.

| அல்-ஈமான் | அல்-இஸ்லாம் |
|---|---|
| ▪ இது இஸ்லாத்தின் அடிப்படை அம்சமாகும். | ▪ சாந்தி, பரிசுத்தம், பாதுகாப்பு பொருள் படும் |
| ▪ நம்பிக்கை எனப் பொருள் படும் | ▪ அல்லாஹ்வால் முஸ்லிம் சமூகத்திற்கு அருளப்பட்ட மார்க்கம் |
| ▪ பிரதான ஆறு அம்சங்களை ஒரு முஸ்லிம் ஈமான் கொள்ள வேண்டும். | ▪ நபி முஹம்மது(ஸல்) கொண்டு வந்த எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய வாழ்க்கை முறை. |
| ▪ ஈமானின் அடிப்படையில் செயற்படும் போதே ஒருவன் உண்மை விசுவாசி ஆகுவான் | ▪ இது பிரதான ஐந்து கமைகளை கொண்டுள்ளது. |
| ▪ "விசுவாசங்கொண்டு நற்செயல்செய்பவர்களை தவிர அனைவரும் நஷ்டத்திலே இருக்கின்றனர்" **(அல்-குர்ஆன்).** | ▪ ஆதம் (அலை) முதல் இறுதி நபி முஹம்மது(ஸல்) அவர்கள் வரையில் அனைவராலும் போதிக்கப்பட்ட ஒரே மார்க்கமாகும். |

2

| அல்-குர்ஆன் | அஸ்ஸுன்னா |
|---|---|
| ▪ இது அல்லாஹ்வால் இறுதி நபிக்கு அருளப்பட்ட இறுதி வேதமாகும். | ▪ இது **'வழிமுறை'** எனப்பொருள்படும். |
| ▪ அல்லாஹ்வின் கலாமாகும் | ▪ நபி முஹம்மது(ஸல்) அவர்களின்இ சொல் இ செயல் நபி முஹம்மது (ஸல்)அங்கீகாரம் குணநலப்பண்புகளைக் கொண்டது. |
| ▪ வஹீ மூலமாக அருளப்பட்டது | ▪ இதனை வஹீ கைறு மத்லூ∴ என்போம் |
| ▪ கால சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப 23 வருடகாலமாக அருளப்பட்டது. | ▪ அல்குர்ஆனுக்கு அடுத்ததாக பின்பற்றப்பட வேண்டியதாகும். |
| ▪ "இதனை நாங்கள் உங்களுக்கு லைலதுல் கத்ர் எனும் இரவில் இறக்கிவைத்தோம்." **(அல்-குர்ஆன்).** | ▪ இது இரண்டாவது சட்டமூலாதாரமாகும். |

3.

| இபாதத் | இமாரத் |
|---|---|
| ▪ இது வணக்கம்இ வழிப்படுதல் எனும் பொருள்படும். | ▪ இது பூமியை வளபபடுத்தும் பணியைக்குறிக்கும். |
| ▪ குறிப்பிட்ட ஒரு செயற்பாட்டில் முற்றிலும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதைக் குறிக்கும். | ▪ பூமியை வளப்படுத்தும் அனைத்து செயற்பாடுகளும் இதில் உள்ளடங்கும். உூம்: மரம் நடுதல். |
| ▪ இது ஹுகூகுல்லாஹ்இ ஹுகூகுல் இபாத் என வகைப்படும். | இமாரத் பணிக்கு அல்லாஹ்விடத்தில் நற்கூலி உண்டு. |
| ▪ குறிப்பிட்ட செயுலு் தூய எண்ணத்துடன் நிறைவேற்றப்படும் போதே அது இபாதத்ஆகும். | ▪ இது பிரதான ஐந்து கமைகளை கொண்டுள்ளது. |
| ▪ ''ஜின்னையோ மனிதனையோ என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை'' **(அல்-குர்ஆன்).** | ▪ ''யார் ஒரு பயிரை நட்டி அதில் ஒரு மனிதனோ பறவையோ பயன் பெருமாயின் அது ஸதகாவாகும்''**(ஹதீஸ்)** |

4.

| அத்துன்யா | அல்ஆகிரா |
|---|---|
| ▪ இது இவ்வுலகை குறிக்கும் | ▪ இது மறுமையைக் குறிக்கும் |
| ▪ அல்லாஹ்வால் படைக்கப்பட்டது.என்றோ ஒரு நாள் அழியும்.(தாருல் பனா) | ▪ இது அழியாவுலகம். என்றும் நிலையானது. (தாருல் பகா) |
| ▪ இவ்வுலக இன்பங்கள் அற்பமானவை | ▪ மறுமை சுவர்க்க இன்பங்கள நிலையானவை. |
| ▪ இவ்வுலக வாழ்வை இறைக்கட்டளையின் பரகாரம் அமைத்துக்கொள்ள வேண்டும். | ▪ மறுமையில் இவ்வுலகச் செயற்பாடுகள் பற்றி வினவப்படுவோம்.. |
| ▪ ''இது மு.ஃ.மின்களின் சிறைக்கூடமும் காபிரகளின் சுவனமும் ஆகும்'' **(அல்-ஹதீஸ்).** | ▪ ''இது மு.ஃ.மின்களின் சுவர்க்கமும் காபிர்களின் சிறைச்சாலையும் ஆகும்'' **(அல்-ஹதீஸ்).** |

**குறிப்பு**: இவைபோன்ற ஐந்து விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் $(5 \times 4 = 20)$ புள்ளிகள் வழங்கப்படும்.

**'ஆ'**

**2) 1.**

- மனிதனின் இம்மை மறுமை வாழ்வுக்குரிய அனைத்து விவகாரங்களையும் உள்ளடக்கியுள்ளது
- ஹுகூகுல் இபாத் - ஹுகூகுல்லாஹ் விவகாரங்கள் குறிப்பிடப்பட்டு விளக்கப்படல்.
- மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையான செயற்பாடுகளும் அவற்றுக்கான இஸ்லாம் கூறும் விதிமுறைகளும்.
  1. தனிமனித வாழ்வு: கடமைகள் இஉரிமைகள்
  2. குடும்ப வாழ்வு: கணவன் - மனைவி கடமைகள் உரிமைகள் இபெற்றார் -பிள்ளைகள்
  3. சமூக வாழ்வு: சமூக பொறுப்புக்கள் இமற்றவர்களுடனான உறவுகள்.
  4. அன்றாட வாழ்வுடனான கொடுக்கல் வாங்கல்கள்.
  5. கல்விஇ வியாபாரம ் இவராஸத்

**2. மேற்குறிப்பிடப்பட்ட அம்சங்கள் ஆதாரங்களுடன் விளக்கப்படல் வேண்டும். (10புள்ளிகள்**

- மனிதனின் தோற்றம்.:
  1. ஆதாரங்கள்.''நபியே!உமது இறைவன் மலக்குகளை நோக்கி நான் பூமியில்(என்னுடைய) பிரதிநிதியை(ஆதமை) நிச்சயமாக அமைக்கப்போகிறேன்''(2:30)

2. ‘நிச்சயமாக என்னுடைய நேர்வழி உங்களிடம் வரும்.எவர் என்னுடைய நேர்வழியை பின்பற்றுகின்றாறோ அவர் வழ தவறமாட்டார் .நட்டமடையவும் மாட்டார்’’(2:38)

- மனிதன் படைக்கப்பட்ட நோக்கம்:

‘‘மனித வர்க்கத்தையும் ஜின்வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவேயன்றிப் படைக்கவில்லை’’ (51:56).

- கிலாபத்இ இபாதத்இ இமாரத் பணிகள் ஆதாரங்களுடன் விளக்கபடல்

‘‘நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு பற்றி விசாரிக்கப்படுவீர்கள்.(முஸ்லிம்)

**மேற்குறிப்பிடப்பட்ட அம்சங்கள் உள்ளடங்கியதாக விளக்கப்பட்டீரப்பின் (10புள்ளிகள்)**

**3) 1.**

ஏனைய சமயங்களுடன் ஒப்பிடுகையில் இஸ்லாம் எந்த அடிப்படையில் சிறப்புப் பெறுகின்றது என்பது பற்றிய சிறியதொரு அறிமுகம்.

சிறப்பம்சங்கள்:

**1.** உலகை படைத்த அல்லாஹ்வால் உருவாக்கப்பட்ட மார்க்கம்.-
ஏனைய தனி நபர்களால் உருவாக்கப்பட்ட சமயங்களுடன் ஒப்பிட்ட விளக்குதல்.

2. வஹீ மூலம் அருளப்பட்டது.:-
சந்தர்ப்ப சூழ் நிலைக்கேற்ப நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டமை.

3. எல்லா சமூகத்தவர்களுக்கு பொதுவான ஓர் மார்க்கமாக அருளப்பட்டுள்ளமை.:
உதாரணமாக ஆரம்பத்தில் இறங்கிய சூராக்கள் **‘‘யா அய்யுஹன்னாஸ்’’** என விழித்திறங்கியதை குறிப்பிடலாம்.

4. எல்லாக்காலத்திற்கும் பொருத்தமானதாக அமைந்திருத்தல்:
அதாவது இறந்தகால நிகழ்வுகள், நிகழ்கால, நிகழ்வுகள் எதிர்கால அனைத்தையும் கொண்டுள்ளது நிகழ்வுகள்.உதாரணமாக:நபிமார்களின் வரலாறுஇகாலம் சுருங்குதல்

மறுமை நிகழ்வுகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

5. ஏக காலத்தில் நெகிழும் தன்மையையும் ,நெகிழாத் தன்மையையும் கொண்ட மார்க்கமாகும்.:
உதாரணமாக: அவ்ரத்தை மறைப்பதை கூறலாம் அதாவது சேலைக்கு பதிலாக ஹபாயா அணிதல்.

**குறிப்பு**: இவைபோன்ற ஐந்து விடயங்கள் எழுதப்பட்டு விளக்கப்பட்டிருப்பின் **(10புள்ளிகள்)** புள்ளிகள் வழங்கப்படும்.

**2.** 1. பிரபஞ்சம்:

- இது அல்லாஹ் தவிர்ந்த அனைத்து படைப்புகளையும் குறிக்கும்
- தோற்றம்:

1.படைப்பாளன் அல்லாஹ்.

ஆதாரம்: ‘‘அவனே வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன்’’(2:117)

- பிரபஞ்சம் மற்றும் அதில் உள்ள அனைத்தையும் மனிதனுக்காகவே படைத்துள்ளான்.

"அவன் தான் (பூமியையும்) பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காகப் படைத்தான்" (2:29)

- பிரபஞ்சமும் அதிலுள்ளவைகளும் அல்லாஹ்வின் நாட்டப்படி அழியும்.
  "பூமியிலுள்ளயாவும் அழிந்தே போகும். மிக்க கண்ணியமும் பெறுமையும் தங்கிய உமதிறைவன் மட்டும் (அழியாது) நிலைத்திருப்பான்."(55: 26-27)
- பிரபஞ்சம் அல்ஹ்வின் சட்டத்தின் கீழ் இயங்குகின்றது.
  "தன்னுடைய வரையறைக்குள் (தவராமல்) செல்லும் சூரியனும் (ஓர் நட்சத்திரமாகும்) இது (யாவையும்) நன்கறிந்தோனும் மிகைத்தோனுமால் விதிக்கப்பட்டதாகும்."(36:38)

**குறிப்பு**: இவைபோன்ற ஐந்து விடயங்கள் எழுதப்பட்டு விளக்கப்பட்டிருப்பின் **(10புள்ளிகள்)** புள்ளிகள் வழங்கப்படும்.